# மார்த்தாண்டம் கல்லூரி ஆங்கிலத்துறையில் இரு பதக்கம்



■ தங்கப்பதக்கம் வென்ற மார்த்தாண்டம் கல்லூரி ஆங்கிலத்துறை மாணவிக்கு தமிழக கவர்னர் ராஜேந்திர விஸ்வநாந் அர்லேகர் சான்றிதழ் வழங்கினார்.

மார்த்தாண்டம், ஆக. 6–

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி முதுகலை ஆங்கிலத் துறைக்கு இரண்டு தங்கப்பதக்கம் கிடைத்தது.

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் 33ம் பட்டமளிப்பு விழா நடந்தது. பல்கலைக்கழகம் தரப்பில் முதல் மதிப்பெண்ணுடன் தங்கப்பதக்கம் பெற்றவர்களை கவுரவித்து, பல்கலைக்கழக வேந்தரும், தமிழக கவர்னருமான ராஜேந்திர விஸ்வநாந் அர்லேகர் சான்றிதழ் வழங்கினார்.

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்த்வ கல்லூரி முதுகலை ஆங்கிலத் துறையை சேர்ந்த மாணவியர் அபிஷா, தர்ஷனா இருவரும் முதல் மதிப்பெண் பெற்று தங்கப்பதக்கம் பெற்றனர். ஒரே துறையைச் சேர்ந்த இரண்டு மாணவிகள் தங்கப் பதக்கம் பெற்றது குறிப்பிடத்தக்கது. மாணவியரை கல்லூரி தாளாளர் டாக்டர் பிரவீன், முதல்வர் டாக்டர் அருண், துறைத்தலைவர் டாக்டர் ஹெம்ஸ்லி சாலமன் மற்றும் பேராசிரியர்கள் பாராட்டினர்.